18.01.2024

O.S.No.254/2009

பி.வா.சா.2 .திரு.சிங்காரவேலன் த.பெ.சேதுராமலிங்கம்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**13**ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. இந்த வழக்கின் 11 மற்றும் 12 பிரதிவாதிகளான சேதுபதி ராஜா மற்றும் காளிஸ்வரனை எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் மதுரை ரிசர்வ்லைனில் உள்ள கேட்டிஸ் மெட்ரிக் பள்ளியின் ஒரு டிரஸ்டியாக உள்ளேன். சர்வே எண்.158/1-ல் அமைந்துள்ள தாவாசொத்தை எனக்கு நேரிடையாக தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்திற்கு அருகே சுமார் 100 மீட்டர் தொலைவில் எங்கள் பள்ளிக்கு சொந்தமான சொத்து அமைந்துள்ளது. அந்த சொத்தை யார் பராமரித்து வருகிறார்கள் என்றால் நான்தான் பராமரித்து வருகிறேன். தாவா சொத்தான சர்வே எண்.158/1-ல் அமைந்துள்ள 1 ஏக்கர் 7 2 செண்டில் 90 செண்டு நிலத்தை 11 மற்றும் 12 பிரதிவாதிகள் கடந்த 08.07.2007 தேதியிட்ட கிரைய ஆவணம் மூலம் கிரையம் பெற்ற விவரம் எனக்கு நேரிடையாக தெரியும் என்றால் சரிதான். அவர்கள் அவ்வாறு கிரையம் வாங்கிய பின்பு அந்த சொத்திற்கு அருகில் எங்களது பள்ளிக்கு சொந்தமான சொத்து அமைந்திருந்ததால் அவர்களது சொத்தையும் சேர்த்து பராமரித்து, பாதுகாத்து கொள்ள என்னிடம் ஒப்படைத்தார்கள் என்றால் சரிதான்.

2. இன்றைய தேதி வரை தாவா சொத்து என்னுடைய பராமரிப்பிலும் பாதுகாப்பிலும் உள்ளது என்றால் சரிதான். தாவா தாக்கல் செய்யும் முன்பு வாதிகள் தாவா சொத்தை பொறுத்து என்னிடம் தகராறில் ஈடுபட்டார்களா என்றால் ஒரே ஒருமுறை தகராறு செய்தார்கள். தாவா சொத்தை நாங்கள் சுத்தம் செய்துகொண்டிருந்த போது வாதிகள் பிரச்சினை செய்தார்கள். அவ்வாறு பிரச்சினை செய்தபோது நாங்கள் போலிசில் புகார் கொடுத்தோமா என்றால் தாவா சொத்தை 11 மற்றும் 12 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்த சௌந்திராஜன் என்பவரின் மகனிடம் விவரத்தை சொல்லி அவரும் எங்களை அழைத்துக்கொண்டு நாங்கள் அனைவரும் சென்று ஊமச்சிகுளம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். தாவா சொத்து தற்போது வரை முள்கம்பிவேலி அமைத்து என்னுடைய பொறுப்பிலும், பாதுகாப்பிலும் உள்ளது என்றால் சரிதான்.